Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror www.tamilmirror.lk

THURSDAY, JUNE 12 2025

வியாழக்கிழமை 12 ஜூன் 2025 | ஒளி: 10 கதிர் 259 | பக்கம்:07 | நகரப்பதிப்பு★ FREE

# “15% அதிகரிப்பு துரோகமாகும்”

> மின்சார கட்டனத்தை 33% ஆல் குறைப்போம் என்றும் ஜனாதிபதி, பொதுத் தேர்தல் மேடைகில் மேடைக்கு மேடை அனுரகுமார திசாநாயகக பிரஸ்தாபித்தார்

> நீட்டிக்கப்பட்ட கடன் வசதியை பெற வேண்டுமானால் மின்சார கட்டணங்களை அதிகரிக்க வேண்டும் என்ற நிபந்தனையை சர்வதேச நாணய நிதியம் விதித்துள்ளது



மின்சாரக் கட்டணத்தை 15% ஆல் அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இலங்கை மின்சார சபையும், அரசாங்கமும் முன்வைத்த முன்மொழிவின் அடிப்படையில் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு இந்த முடிவை எடுத்துள்ளது. இந்த மின்சாரக் கட்டண அதிகரிப்பு மக்கள் ஆணையை மீறும் செயலாகும். மக்களின் குரலுக்கு செவிசாய்க்காத போக்காகும். இது இந்நாட்டு மக்களை ஏமாற்றும் நடவடிக்கையாகும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலின் போது, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க மின்சாரக் கட்டணத்தை ரூ.9000 இல் இருந்து ரூ.6000 ஆகவும், ரூ.3000 கட்டணத்தை ரூ.2000 ஆகவும் குறைப்போம் என்றார்.

மின்சார கட்டணத்தை 33% ஆல் குறைப்போம் என்றும் மேடைக்கு மேடை பிரஸ்தாபித்தார். பின்னர், பொதுத் தேர்தலில் அக்கட்சி வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியை ஈட்டி 159 ஆசனங்களை தனதாக்கிய சந்தர்ப்பத்திலும் கூட மின்சாரக் கட்டணத்தை 33% ஆல் குறைத்திருக்க வேண்டும். ஆனால், அது நடக்கவில்லை என்றும் குற்றஞ்சாட்டினார்.

மேலும் அவர் கூறியுள்ளதாவது, நாட்டு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை அப்பட்டமாக மீறி, ஜனாதிபதியே தான் வெளியிட்ட அறிக்கைகளை பொய்களாக மாற்றும் வகையில், மின்சாரக் கட்டணத்தை 15% ஆல் அதிகரிக்க தற்போது இந்த அரசாங்கம் எடுத்த நடவடிக்கை, இந்த நாட்டின் மின்சார நுகர்வோரின் உரிமைகளை அப்பட்டமாக மீறும் செயலாக அமைந்து காணப்படுகின்றது.

மின்சாரக் கட்டண அதிகரிப்பு தொடர்பாக புதன்கிழமை (11) விசேட கூற்றொன்றை முன்வைத்து கருத்துத் தெரிவிக்கும்.

தொடர்ச்சி P2

மின்சார கட்டணம்

## 15 சதவீதம் அதிகரிப்பு

மின்சாரக் கட்டணங்களில் 15 சதவீத அதிகரிப்பை இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணையம் (PUCSL) புதன்கிழமை (11) அறிவித்துள்ளது. இந்த அதிகரிப்பு, 2025 ஜூன் 12, முதல் அமலுக்கு வரும .

2025 ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் பொருந்தும் திருத்தப்பட்ட கட்டணங்கள் அதிகாரப்பூர்வமாக புதன்கிழமை (11) அறிவிக்கப்பட்டன.

## ரயில் தண்டவாள பாதையில் குழி



கண்டியில் ரயில் மார்க்கத்தில் திடீரென குழி ஒன்று ஏற்பட்டுள்ளமையினால் கண்டி மற்றும் பேராதனை நிலையங்களுக்கு இடையிலான ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

கண்டி நோக்கிச் செல்லும் ரயில் சேவைகளும் , கண்டி ரயில் நிலையத்திலிருந்து பயணத்தை ஆரம்பிக்கும் ரயில் சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் ரயில் திணைக்கள கட்டுப்பாட்டு அறை தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



## ஜேர்மனியை சென்றடைந்தார் ஜனாதிபதி அனுர

ஜேர்மனியக் கூட்டாட்சி குடியரசிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, பெர்லினின் பிராண்டன்பேர்க் சர்வதேச விமான நிலையத்தை புதன்கிழமை (11) முற்பகல் சென்றடைந்தார்.

ஜனாதிபதியை வரவேற்கும் உத்தியோகபூர்வ வரவேற்பு நிகழ்வு, ஜேர்மன் ஜனாதிபதி பிராங்க்-வால்டர் ஸ்டெய்ன்மியரின் (Frank-Walter Steinmeier) தலைமையில், பிற்பகல் பெர்லினில் உள்ள பெல்வீவ் மாளிகையில் (Bellevue Palace) நடைபெற்றது.

தொடர்ச்சி P2

## உடலியல் தண்டனையை திருத்தம் செய்ய சட்டம்

உடலியல் தண்டனை மூலம் பிள்ளைகளுக்கு ஏற்படும் உடல் மற்றும் உள துன்புறுத்தல் அதிகரித்திருப்பது விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

எனவே? எந்தவொரு துறையிலும் உடல் தண்டனை மூலம் துன்புறுத்தலுக்கு உள்ளாவதனை தடை செய்தல் மற்றும் உடல் துன்புறுத்தலுக்காகத் தண்டனை விதிப்பதற்கான ஏற்பாடுகளை விதிப்பதற்காக (19 ஆவது அதிகாரம்) தண்டனைச் சட்டக் கோவையை திருத்தம் செய்வதற்காக 2024-04-29 திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## சபாத் வீடுகளுக்கு 24/7 பாதுகாப்பு



நாட்டில் உள்ள வெளிநாட்டினரின் பாதுகாப்பிற்கு ஏதேனும் அச்சுறுத்தல்கள் இருந்தால் அவை மதிப்பீடு செய்யப்படும் என்றும், அதற்கேற்ப பொருத்தமான பாதுகாப்பு நடவடிக்கைகள் செயல்படுத்தப்படும் என்றும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையிடப்பட்ட அச்சுறுத்தல்களுக்குப் பதிலளிக்கும் விதமாக, இஸ்ரேலிய குடியிருப்பாளர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் மத நடவடிக்கைகளில் ஈடுபடவும், ஓய்வெடுக்கவும், உணவு மற்றும் பானங்களை அணுகவும் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் நிறுவப்பட்ட சபாத் வீடுகளில் (யூத சமூக மையங்கள்) 24 மணி நேரப் பாதுகாப்பை பொலிஸார் நிறுத்தியுள்ளனர்.

முன்னதாக, காசா மோதல் வெடித்ததைத் தொடர்ந்தும், பிரபலமான சுற்றுலாப் பகுதிகளுக்கு அச்சுறுத்தல்கள் ஏற்படக்கூடும் என்ற எச்சரிக்கையைத் தொடர்ந்தும், இலங்கை பொலிஸார் இந்த மையங்களில் பாதுகாப்பை அதிகரித்தது. அறுகம்பே விரிகுடாவில் சர்ஃபர்ஸ் உட்பட இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகளும் அதிகரித்த பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.



## “தாய்ப்பால் ஊட்டுவதை ஊக்குவிக்க சட்டமூலம்”

தாய்ப்பால் ஊட்டுவதை ஊக்குவிக்கும் வகையில் சட்டமூலமத்தை கொண்டுவருவதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தாய்ப்பால் ஊட்டும் குறி காட்டி தொடர்பில் இலங்கை மிகவும் உயர்ந்த மட்டத்தில் இருப்பதுடன், இலங்கை World Breastfeeding Trends Initiative (WBTI) அமைப்பினால் ‘Green Status’ வழங்கப்பட்ட நாடாகும்.

வர்த்தக ரீதியான குறிக்கோளை முன்னிலைப்படுத்தி பால்மா உற்பத்தித் தொழிற்றுறை மூலம் பிள்ளைகளுக்கு விடுக்கப்படும் ஒழுக்க நெறிக்கு முரணான மற்றும் பாதகமான தாக்கங்களிலிருந்து பிள்ளைகளைப் பாதுகாத்து, பிள்ளைகளின் சுகாதார மற்றும் போசாக்கைப் பாதுகாப்பதும், விஞ்ஞான ரீதியாக உறுதி செய்யப்பட்டுள்ள பிரதான தலையீடாகக் கருதி தாய்ப்பால் ஊட்டுதலைப் பாதுகாப்பதாகும்.

தொடர்ச்சி P2

## லிந்துல நகர சபையின் முன்னாள் தலைவருக்கு பிணை



தலவாக்கலையில் உள்ள லிந்துல நகரசபைக்குச் சொந்தமான இறைச்சிக் கூடத்தைக் குறைந்த விலையில் வழங்கியதன் மூலம் ரூ.2.3 மில்லியனுக்கும் அதிகமான இழப்பை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த லிந்துல நகரசபையின் முன்னாள் தலைவர் அசோக சேபாலவை பிணையில் விடுவிக்க கொழும்பு தலைமை நீதவான் தனுஜா லக்மாலி புதன்கிழமை (11) உத்தரவிட்டார்.

சந்தேக நபருக்கு தலா ரூ.2 மில்லியன் வீதம் இரண்டு பிணைப் பத்திரங்களை விதித்த நீதவான், வெளிநாடுகளுக்குச் செல்வதற்குத் தடை விதித்தும் உத்தரவிட்டார். லிந்துல நகரசபையின் தலைவராக2019 ஆம் ஆண்டில், செயல்பட்டபோது, ரூ.2.3 மில்லியனுக்கும் அதிகமான இழப்பை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் அதிகாரிகளால், கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார், அதன் பின்னர் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

## உப்புல்தெனியவின் விளக்கமறியல் நீடிப்பு

இடைநீக்கம் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சிறைச்சாலை ஆணையாளர் நாயகம், துஷார உப்புல்தெனியவின் விளக்கமறியல், ஜூன் 25ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அளுத்கடை எண் 01 நீதவான் நீதிமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (10) ஆஜர்படுத்தப்பட்ட அவரை புதன்கிழமை (11) விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டிருந்தார். அதன்படி, கொழும்பு பிரதான நீதிவான் தனுஜா லக்மாலி முன்னிலையில் ஆஜர்படுத்திய போதே, அவருடைய விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# “15% அதிகரிப்பு துரோகமாகும்”

> முந்தைய அரசாங்கத்தின் சர்வதேச நாணய நிதிய இணக்கப்பாட்டை ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் அரசாங்கமும் அவ்வாறே முன்கொண்டு செல்கிறது

> வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் வரை மின்சார நுகர்வோருடன் இணைந்து ஐக்கிய மக்கள் சக்தி குரல் எழுப்பும். ஐக்கிய மக்கள் சக்தி ஜனநாயக ரீதியிலான போராட்டத்திலும் ஈடுபடும்

> சர்வதேச நாணய நிதியத்தின் (IMF)பிரதிநிதிகளை சந்தித்தபோது நாம் புதியதொரு இணக்கப்பாட்டுக்கு வருவோம் என தெரிவித்திருந்தோம்.ஐக்கிய மக்கள் சக்தி (SJB) இன்றும் அந்த நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) அடுத்த கட்ட தவணையைப் பெறுவதற்காக மின்சாரக் கட்டணங்கள் இவ்வாறு அதிகரிக்கப்பட்டுள்ளன. நீட்டிக்கப்பட்ட கடன் வசதியை பெற வேண்டுமானால் மின்சார கட்டணங்களை அதிகரிக்க வேண்டும் என்ற நிபந்தனையை சர்வதேச நாணய நிதியம் விதித்துள்ளது.

திசைகாட்டி தலைமையிலான ஜே.வி.பி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் புதிய சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தமொன்றையும் இணக்கப்பாடொன்றையும் எட்டுவோம் என வாக்குறுதியளித்திருந்தது.

என்றாலும், ஆட்சிக்கு வந்தவுடன் தனது ஆணையை மீறியுள்ளதுடன், முந்தைய அரசாங்கத்தின் சர்வதேச நாணய நிதிய இணக்கப்பாட்டை அவ்வாறே முன்கொண்டு செல்கிறது.

இந்த அரசாங்கம் மக்கள் ஆணையை மீறி செயல்பட்டு வருகிறது. மக்கள் ஆணையைக் காட்டிக் கொடுத்து பொதுமக்களின் கருத்தைக் கிடப்பில் போட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தின் இணக்கப்பாட்டை இவர்கள் அதே முறையில் செயல்படுத்தியதன் விளைவாக, நாடும் மக்களும் இன்று இவ்வாறான நிலைமைகளுக்கு ஆளாகியுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியும் கூட சர்வதேச நாணய நிதியத்துடன் இணங்கிச் செயல்படும். என்றாலும் IMF பிரதிநிதிகளை சந்தித்தபோது நாம் புதியதொரு இணக்கப்பாட்டுக்கு வருவோம் என தெரிவித்திருந்தோம். ஐக்கிய மக்கள் சக்தி (SJB) இன்றும் அந்த நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளது.

தற்போதைய அரசாங்கம் பொதுமக்களுக்கு வழங்கிய அனைத்து வாக்குறுதிகளையும் பொய்யாக்கி, மின்சார கட்டணத்தை 15% ஆல் அதிகரித்துள்ளது.

அரசாங்கம் எடுத்துள்ள இந்த நடவடிக்கையால் ஏழைகள், சாதாரண மக்கள், உழைக்கும் மக்கள், தொழில்முனைவோர்கள் மற்றும் சுற்றுலாத் துறையில் ஈடுபட்டு வருவோரை கடுமையான சிக்கலுக்குள் தள்ளும். எனவே, மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை உடனடியாக நிறைவேற்றி, வழங்கப்பட்ட மக்கள் ஆணையைக் காட்டிக் கொடுக்க இடமளிக்க வேண்டாம் என கேட்டுக்கொள்கிறோம்.

மின்சாரக் கட்டணத்தை 15% அதிகரிப்பதற்குப் பகரமாக மின்சாரக் கட்டணத்தை 33% ஆல் குறைக்கும் நடவடிக்கையையே இந்த அரசாங்கம் எடுத்திருக்க வேண்டும். வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் வரை மின்சார நுகர்வோருடன் இணைந்து ஐக்கிய மக்கள் சக்தி குரல் எழுப்பும். ஐக்கிய மக்கள் சக்தி ஜனநாயக ரீதியிலான போராட்டத்திலும் ஈடுபடும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

# ரயில் தண்டவாள பாதையில் குழி



இந்நிலையில், ரயில் பயணிகளின் நலனை கவனத்தில் கொண்டு, கண்டி ரணில் நிலையத்துக்கும் பேராதனை ரணில் நிலையத்துக்கும் இடையில் பஸ்சேவைகள் நடத்தப்பட்டன.



# “தாய்ப்பால் ஊட்டுவதை ஊக்குவிக்க சட்டமூலம்”

தாய்ப்பால் ஊட்டுதல் தொடர்பான உலக முன்னோடி என்ற ரீதியில் இலங்கை பெற்றுள்ள மரியாதையைத் தொடர்ச்சியாகப் பேணுதலை உறுதி செய்வதையும் குறிக்கோளாகக் கொண்டு தாய்ப்பால் ஊட்டுதலை ஊக்குவிப்பதற்கான சட்டத்தின் மூலம் சட்ட ரீதியான ஏற்பாடுகளை அறிமுகம் செய்வதற்காக 2018-10-16 திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஜேர்மனியை சென்றடைந்தார் ஜனாதிபதி அனுர

இதைத் தொடர்ந்து, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவிற்கும் ஜேர்மன் ஜனாதிபதி பிராங்க்-வால்டர் ஸ்டெய்ன்மியருக்கும் (Frank-Walter Steinmeier) இடையில் உத்தியோகபூர்வ சந்திப்பு நடைபெற உள்ளது.

இந்த விஜயத்தில், வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் அரசாங்கத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் ஜனாதிபதியுடன் கலந்துகொள்கின்றனர்.

# உடலியல் தண்டனையை திருத்தம் செய்ய சட்டம்

அதற்கமைய, ஏற்புடைய பணிகளுக்கு சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்ட தண்டனைச் சட்டக் கோவை (திருத்தச்) சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிட்டு, பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு இதற்கு முன்னர் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ள போதிலும், அதற்கமைய செயற்பட முடியவில்லை.

குறித்த சட்டமூலத்தை துரிதமாக அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது

# உப்புல்தெனியவின் விளக்கமறியல் நீடிப்பு

ஜனாதிபதி பொது மன்னிப்பைச் சட்டவிரோதமாகப் பயன்படுத்தி மற்ற கைதிகளை விடுவித்தது தொடர்பான விசாரணைகள் தொடர்பாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம், திங்கட்கிழமை (09) கைது செய்யப்பட்டுள்ளார்.

# அதுல திலகரத்ன மாயம்?

4 மில்லியன் ரூபாய் மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில் குற்றவாளியாக இனங்காணப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் பேரில் அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த டபிள்யூ. எம்.அதுல திலகரத்ன என்பவர் வெசாக் போயா தினத்தில் இருந்து பத்து நாட்களுக்குப் பிறகு அதாவது மே.2 அன்று விடுவிக்கப்பட்ட விவகாரம் சூடுபிடித்துள்ளது.

இந்த விவகாரம் தொடர்பில் அனுராதபுரம் சிறைச்சாலையின் கண்காணிப்பாளர் மோகன் கருணாரத்ன கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், இடைநீக்கம் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சிறைச்சாலை ஆணையாளர் நாயகம், துஷார உப்புல்தெனியவின் விளக்கமறியலும் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அவரை தேடி பல பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. எனினும், அவர், விடுவிக்கப்பட்ட இரண்டொரு நாளிலேயே நாட்டைவிட்டு தப்பியோடிவிட்டார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# மட்டு., முதல்வர் சிவம் பாக்கியநாதன்



பேரின்பராஜா சபேஷ்

மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வராக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த சிவம் பாக்கியநாதன் ஏகமனதாக புதன்கிழமை (11) தெரிவு செய்யப்பட்டார்.

மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் மற்றும் பிரதி முதல்வர் பதவிகளுக்கான தெரிவு கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் மாநகர சபை சபா மண்டபத்தில் புதன்கிழமை (11) காலை நடைபெற்றது.

மாநகரசபையின் முதல்வர் பதவிக்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியை சேர்ந்த சிவம் பாக்கியநாதனின் பெயரை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த மாசிலாமணி சண்முகலிங்கம் முன்மொழிந்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த நவரெத்தினராசா ரகுநாதன் வழிமொழிந்தார். மேயர் பதவிக்கு வேறு எவரும் போட்டியிடாத காரணத்தினால் சிவம் பாக்கியநாதன் மாநகரசபை முதல்வராக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.
முதல்வராகத் தெரிவு செய்யப்பட்ட சிவம் பாக்கியநாதன் தலைமையில் பிரதி முதல்வருக்கான தெரிவு நடைபெற்றது.

பிரதி முதல்வர் பதவிக்காக இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த வைரமுத்து தினேஷ்குமாரின் பெயரை துரைசிங்கம் மதன் முன்மொழிந்தார், மீராசாஹிபு ஆயிஷா உம்மா வழி மொழிந்தார்.

பிரதி முதல்வர் பதவிக்கு கந்தசாமி சத்தியசீலனின் பெயரை சீனித்தம்பி ஜெயந்திரகுமார் முன்மொழிந்தார் அவரை சசிகலா விஜயதேவா வழிமொழிந்தார்.

இருவர் முன்மொழியப்பட்ட காரணத்தினால் வாக்கெடுப்பு நடைபெற்றது.

வாக்கெடுப்பில் 18 வாக்குகளைப் பெற்று பிரதி முதல்வர் பதவிக்காக இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த வைரமுத்து தினேஷ்குமார் தெரிவு செய்யப்பட்டார்.

கந்தசாமி சத்தியசீலன் 04 வாக்குகளைப் பெற்றார். 12 உறுப்பினர்கள் நடுநிலை வகித்தனர்.

## இலங்கை கனடா பாராளுமன்ற நட்புறவு சங்கம்

# தலைவராக அமைச்சர் அனுர கருணாதிலக தெரிவு

பத்தாவது பாராளுமன்றத்தின் இலங்கை கனடா பாராளுமன்ற நட்புறவு சங்கத்தின் தலைவராக நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர் அநுர கருணாதிலக தெரிவுசெய்யப்பட்டார்.

இலங்கை கனடா பாராளுமன்ற நட்புறவுச்சங்கத்தை மீள ஸ்தாபிப்பதற்கான கூட்டம் சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் கடந்த 06ஆம் திகதி பாராளுமன்றத்தில் நடைபெற்றபோதே இத்தெரிவு இடம்பெற்றது.

இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வால்ஷ், இந்நிகழ்வில் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்டார். அத்துடன், அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள், பதவியணித் தலைமையதிகாரியும், பாராளுமன்ற பிரதிச் செயலாளர் நாயகமுமான சமிந்த குலரத்ன உள்ளிட்ட பலரும் இதில் கலந்துகொண்டனர்.

பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த ஹெட்டியாராச்சி இலங்கை – கனடா பாராளுமன்ற நட்புறவு சங்கத்தின் செயலாளராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

இங்கு கருத்துத் தெரிவித்த சபாநாயகர், இலங்கைக்கும் கனடாவுக்கும் இடையில் ஏழு தசாப்தத்திற்கு மேலாகக் காணப்படும் நீண்டகால உறவுகளை நினைவு கூர்ந்தார். இலங்கையின் 9வது பெரிய ஏற்றுமதி சந்தையாக கனடா விளங்குவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றங்களுக்கு இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்திய சபாநாயகர், பாராளுமன்ற நட்புறவுச் சங்கம் இரு நாட்டு சட்டமன்றங்களுக்கும் இடையில் முக்கிய பாலமாகச் செயற்படும் என்றார். இலங்கையில் காணப்படும் முதலீட்டு வாய்ப்புக்கள் குறித்து கனடா கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்றும் சபாநாயகர் கேட்டுக்கொண்டார்.

பரஸ்பர நம்பிக்கை மற்றும் பகிரப்பட்ட மதிப்புக்களின் ஊடாக ஏற்படுத்தப்பட்டுள்ள இரு நாட்டுக்கும் இடையிலான உறவுகள் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும் என இரு தரப்பினரும் வலியுறுத்தினர்.

புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட தலைவர் அமைச்சர் அநுர கருணாதிலக உரையாற்றுகையில், இரு பாராளுமன்றங்களுக்கும் இடையில் ஒரு பாலமாக நட்புறவு சங்கத்தின் முக்கிய பங்கை வலியுறுத்தியதுடன், இலங்கைக்கும் கனடாவிற்கும் இடையே ஏற்கனவே வலுவான உறவுகளை ஆழப்படுத்த அர்த்தமுள்ள உறவுகளை இதன் மூலம் மேம்படுத்த முடியும் என்றும் நம்பிக்கை வெளியிட்டார்.

# கெஹெலிய வீட்டுப் பணிப்பெண் கைது

முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவின் வீட்டுப் பணிப்பெண் ஒருவர், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அதிகாரிகளால், புதன்கிழமை (11) கைது செய்யப்பட்டார்.

சுகாதார அமைச்சகத்திற்கு பெயரளவு நியமனங்களை வழங்குவதன் மூலம் அரசாங்க சம்பளம் மற்றும் கூடுதல் நேர கொடுப்பனவுகளை தவறாகப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டில், விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அந்த பணிப்பெண், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு புதன்கிழமை (11) அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். விசாரணையின் பின்னரே இவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட பெண் எம்பிலிப்பிட்டியவைச் சேர்ந்தவர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவிருந்தார்.

# “துரோகம் செய்யேன்”

■ சிவா ஸ்ரீதரராவ்

மறைந்த எனது தந்தை அமரர் சுந்தரலிங்கம் மற்றும் மறைந்த தோழர் பாலகிருஷ்ணன் ஆகியோர் மக்கள் விடுதலை முன்னணிக்காக செய்த அர்ப்பணிப்பு தேசிய மக்கள் சக்தியின் வெற்றிக்கு காரணமாகும் என்று பெருந்தோட்ட சமூக அபிவிருத்தி மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார்.

காவத்தை ஓபாத்த திம்புல்வல பிரதேசத்தில் திங்கட்கிழமை(09) அன்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்,

“காவத்தை ஓபாத்த பிரதேசம் எனது சொந்த பூமி ஆகும். இந்த பூமியில் வாழ்ந்த எனது தந்தை மறைந்த அமரர் சுந்தரலிங்கம் மற்றும் அவருடன் தோழமையாக



செயல்பட்ட, மறைந்த அமரர் பாலகிருஷ்ணன் ஆகியோர் மக்கள் விடுதலை முன்னணிக்காக ஆரம்ப காலத்தில் இருந்து உழைத்தவர்கள்.

இவர்களின் பின்னணியிலேயே நான் அரசியலில் ஈடுபட்டேன். எனது இந்த வெற்றிக்கு இவர்களும் ஒரு காரண கர்த்தாக்களாக விளங்குகிறார்கள்.

எனவே, இந்த நேரத்தில் எமது கட்சிக்காக ஆரம்ப காலத்திலிருந்து மிகவும் அர்ப்பணிப்புடன் செயல்பட்ட இவ்விருவரும் எமது மத்தியில் இன்று இல்லாவிட்டாலும் கூட, அவர்களை ஞாபகப்படுத்தி அவர்களுக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

இன்று மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்த ஒரு சில அரசியல்வாதிகள் எனக்கு எதிராகக் காவத்தை ஓபாத்த பிரதேசத்தில் பொய்யான பிரசாரங்களைச் செய்து வருகிறார்கள். இதை கேட்டு மக்கள் ஒரு போதும் ஏமாற மாட்டார்கள் என்பதை எனக்கு உறுதியாகக் கூற முடியும்.

எனக்கு ஆதரவளித்த மக்களுக்கு எதிராக நான் ஒரு போதும் துரோகம் செய்ய மாட்டேன். மக்கள் என்னை முழுமையாக நம்பியுள்ளார்கள்.

எமது அரசாங்கம் ஊழல் அற்ற அரசாங்கம். அதேபோல் நானும் என்னுடன் கடமை புரியும் அனைவரும் ஊழல் அற்றவர்கள். நாங்கள் ஊழல் வாதிகளுக்கு எதிராகவே செயல்பட்டு வருகிறோம்.

காவத்தை ஓபாத்த பிரதேசத்திற்கு பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. விரைவில் அதற்கான பணிகள் ஆரம்பிக்கப்படும்.

மேற்படி அபிவிருத்தி திட்டங்கள் அனைத்தும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் மூலமாகவே முன்னெடுக்கப்படும்.

குறுகிய காலத்தில் எமது அரசாங்கம் நாட்டில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது" என பெருந்தோட்ட சமூக அபிவிருத்தி மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் மேலும் தெரிவித்தார்.















# மன்னாரில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

மன்னாரில் மக்களின் வாழ்வியலைப் பாதிக்கும் வகையில் முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் மன்னார் பிரஜைகள் குழு மற்றும் சிவில், பொது அமைப்புக்கள் இணைந்து புதன்கிழமை (11) காலை ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுத்தனர்.

மன்னார் பொது விளையாட்டு மைதானத்திலிருந்து ஆரம்பமான கவனயீர்ப்பு பேரணி பிரதான வீதியூடாக மன்னார் பஜார் பகுதியைச் சென்றடைந்தது.

மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மாக்கஸ் அடிகளார் தலைமையில் ஆரம்பமான ஆர்ப்பாட்ட பேரணியில் மன்னார் மாவட்டத்தில் உள்ள சிவில் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள்,சர்வமத தலைவர்கள், வர்த்தகர்கள், அரசியல் பிரதிநிதிகள் உள்ளடங்களாக ஆயிரக்கணக்கான மக்களும் கலந்து கொண்டனர்.

பேரணியில் கலந்து கொண்டவர்கள் மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன்னால் ஒன்று கூடி பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பினர்.

இந்த நிலையில் மன்னார் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதிக்கு மகஜர் கையளிக்கும் வகையில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரனிடம் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு ஞானப்பிரகாசம் அடிகளார் மற்றும் சர்வமத தலைவர்கள் இணைந்து மகஜரை கையளித்தனர்.

மகஜரை பெற்றுக் கொண்ட அரசாங்க அதிபர், “மன்னார் மாவட்ட மக்கள் நீண்ட காலமாகக் காற்றாலை மற்றும் கனிய மணல் அகழ்வுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து வருகின்றமை குறித்து நான் நன்கு அறிவேன். மக்களின் கோரிக்கை அடங்கிய மகஜர் சர்வமத தலைவர்கள் ஊடாக ஜனாதிபதிக்கு வழங்கும் வகையில் என்னிடம் கை அளிக்கப்பட்டுள்ள நிலையில்,நான் உடனடியாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பேன்.” என தெரிவித்துள்ளார்.

– எஸ்.ஆர்.லெம்பேட்



# மலையகத்தில் மோசமான காலநிலை

■ எம்.கிருஸ்ணா

கடும் காற்றுடன் கூடிய அடை மழையில் நுவரெலியா - ஹட்டன் பிரதான வீதியின் கொட்டகலை கொமர்சல் பகுதியில் செவ்வாய்க்கிழமை(10) அன்று இரவு மண்மேடு சரிந்து வீழ்த்துள்ளமையினால் ஒருவழிப் போக்குவரத்து நிலை ஏற்பட்டுள்ளது.

அதேபோல, நோட்டன் - மஸ்கெலியா பிரதான வீதியின் இரண்டாம் கட்டைப் பகுதியில் பாரிய மரமொன்று வீதியில் விழுந்துள்ளமையால் குறித்த வீதியின் போக்குவரத்து முற்றாக தடைப்பட்டுள்ளது.

அத்துடன், கடும் காற்றுடன் கூடிய மழை நிலவி வருகின்ற நிலையில், மேடுகள் சரிந்து விழும் அபாயம் காணப்படுவதுடன், வீதிகள் வழுக்கல் தன்மை காரணமாக சாரதிகள் அவதானத்துடன் வாகனங்களை செலுத்துமாறும் பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# கைக்குண்டுடன் இராணுவ வீரர் கைது

கடவத்தை, மஹகடை சந்தியில் வைத்து கைக்குண்டு வைத்திருந்த இராணுவ வீரர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டதாக கடவத்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கோனஹேன, கடவத்தை மற்றும் எல்பிட்டிய பிரதேசங்களைச் சேர்ந்த 30 மற்றும் 44 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இருவரும் முச்சக்கர வண்டியில் பயணித்துக்கொண்டிருந்த நிலையில் அவர்களை நிறுத்தி பொலிஸ் அதிகாரிகள் மேற்கொண்ட சோதனையின் போது கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

# கொடூரமாக தாக்கப்பட்டு ஒருவர் மரணம்

கேகாலை, தெரணியகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கலஹிட்டிகந்த பகுதியில் கொடூரமாக தாக்கப்பட்டு ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவம் செவ்வாய்க்கிழமை(10) காலை இடம்பெற்றுள்ளது.

தெரணியகல, கலஹிட்டிகந்த பகுதியைச் சேர்ந்த 50 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபருக்கும் இளைஞன் ஒருவனுக்கும் இடையில் ஏற்பட்ட தகராறில் குறித்த நபர் கொடூரமாக தாக்கப்பட்டுக் காயமடைந்த நிலையில், கரவனெல்ல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் 24 வயதுடைய இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தெரணியகல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நான்கு பதில் அமைச்சர்கள் நியமனம்

ஜெர்மன் ஜனாதிபதி பிராங்க்-வால்டர் ஸ்டெய்ன்மியரின் (Frank-Walter Steinmeier) அழைப்பின் பேரில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, ஜெர்மனியக் கூட்டாட்சி குடியரசிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ளதன் காரணமாக, நான்கு அமைச்சுகளுக்கு பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் கீழ் உள்ள டிஜிட்டல் பொருளாதார அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு மற்றும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஆகிய அமைச்சுகளுக்கும், அமைச்சர் விஜித ஹேரத்தின் கீழ் உள்ள வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சிற்கும் பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி, தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சரான கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பதில் அமைச்சராகவும், டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன, டிஜிட்டல் பொருளாதார பதில் அமைச்சராகவும், பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர பாதுகாப்பு பதில் அமைச்சராகவும், வெளிநாட்டலுவல்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திர, வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை பதில் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.



## லொறியுடன் பேருந்து மோதியதில்

# 15 பேர் காயம்

மொனராகலையிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த தனியார் பேருந்தொன்று வெல்லம்பிட்டி வீதியோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த லொறியுடன் மோதியதில் 15 பேர் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வெல்லம்பிட்டிய எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கும் மிதொடமுல்ல சந்திக்கும் இடையிலான வீதியோரத்தில் அமைந்துள்ள ஒரு வன்பொருள் நிறுவனத்தை சேர்ந்த மூன்று லொறிகள் இரவு நேரத்தில் குறித்த நிறுவனத்திற்கு முன்பாக நிறுத்தப்பட்டிருந்த நிலையில் புதன்கிழமை (11) காலை அதிவேகமாக வந்த பேருந்து, லொறியுடன் மோதியுள்ளது.

இதனால் நிறுத்தப்பட்டிருந்த ஏனைய லொறிகளும் ஒன்றுடன் ஒன்று மோதி நான்கு வாகனங்களுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

# அனுராதபுர சிறை கண்காணிப்பாளருக்கு விளக்கமறியல்

சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நபரை ஜனாதிபதி பொது மன்னிப்பு என்ற பெயரில் சட்டவிரோதமாக விடுவித்ததற்காக அனுராதபுரம் சிறைச்சாலை கண்காணிப்பாளர் மோகன் கருணாரத்னவை எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அனுராதபுரம் நீதவான் நாலக சஞ்சீவ ஜெயசூரிய புதன்கிழமை (11) உத்தரவிட்டார்.

வெசாக் போயா தினத்திற்காக வழங்கப்பட்ட ஜனாதிபதி மன்னிப்பின் கீழ் ஒரு கைதியை சட்டவிரோதமாக விடுவித்த வழக்கில் குற்றப் புலனாய்வுத் துறையால் (CID) கைது செய்யப்பட்டு, அனுராதபுரம் நீதவான் நீதிமன்றத்தில் புதன்கிழமை (11) ஆஜர்படுத்தப்பட்ட போதே, நீதிமன்றம் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளது.

# 16 கம்பெக்டர் ஊர்திகளை கொள்வனவு செய்ய அங்கிகாரம்

உள்ளூராட்சி அதிகார சபைகளில் கழிவுகளை சேகரித்தல் மற்றும் போக்குவரத்துச் செய்வதற்காக 16 கழிவுப் போக்குவரத்து கம்பக்டர் ஊர்திகளைக் கொள்வனவு செய்வதற்காக அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளைப் போலவே இலங்கையும் திண்மக்கழிவகற்றல் முகாமைத்துவம் தற்போது சவால் மிக்க கடினமான விடயமாக மாறியுள்ளது.

அதற்கமைய, நகரக் கழிவு முகாமைத்துவத்திற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதனடிப்படையில், 2025ஆம் ஆண்டுக்காக வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள 500 மில்லியன் நிதியைப் பயன்படுத்தி 16 கழிவுப் போக்குவரத்து கம்பக்டர் ஊர்திகளை கொள்வனவு செய்ய அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

# “அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்; சிறுவர் தொழிலாளரை ஒழிப்போம்”

ஒவ்வொரு சிறுவரும் தொழிலாளி உருவாகும் போது, நாட்டின் சாதனையாளர் ஒருவர் இழக்கப்படுகின்றார். நாட்டின் எதிர்காலம் இருண்ட நிலைக்குத் தள்ளப்படுகின்றது. புத்தகப்பையைச் சுமக்க வேண்டிய வயதில் குடும்ப வறுமை காரணமாக சிறுவர் தொழிலாளியாக மாறும் குழந்தைகளின் வாழ்வு சுருண்டு போகின்றது புத்தக பை, குப்பைக்குச் சென்று விடுகின்றது.

சிறுவர் தொழிலாளர்களைத் தடுக்கவே பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு (ILO) சிறுவர் தொழிலாளர்களுக்கு எதிரான உலக தினத்தை ஆண்டுதோறும் ஜூன் 12 அன்று கொண்டாட வலியுறுத்துகின்றது. அன்றைய நாளில் பல்வேறான விழிப்புணர்வு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

பாடசாலைகளில் இருந்து விலகி, வேலைகளுக்கு அதிகமான பிள்ளைகள் அழைத்துச் செல்லப்படுவதால், மில்லியன் கணக்கான குழந்தைகளின் எதிர்காலம் ஆபத்தில் உள்ளது என்று ஐ.நா. தொழிலாளர் அமைப்பு ஏற்கெனவே சுட்டிக்காட்டியிருந்தது. எனினும், சிறுவர் தொழிலாளர்களின் எண்ணிக்கை குறையவே இல்லை.

பணவீக்க உயர்வு மற்றும் அதைத் தொடர்ந்து வாழ்க்கைச் செலவு உயர்வு, போதியளவான உணவு கிடைக்காமை, தங்குமிட வசதி இன்மை, பெற்றோரின் வருமானம் போதாமை, ஆகியவற்றால், சிறுவர்கள் தொழிலாளர்களாக வேலைக்குச் சென்றுவிடுகின்றனர்.

எனினும், குறைந்த சம்பளத்தில், கூடுதல் வேலைகளை வாங்கவும், சலுகைகள், விடுமுறைகள் வழங்காமல், எந்தநேரத்தில் வேலைக்கு அமர்த்துவதற்காக சிறுவர் தொழிலாளர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். நமது நாட்டை பொறுத்தவரையில், வீட்டு வேலைகளில் கூடுதலான சிறுவர் தொழிலாளர்களே உள்ளனர்.

சமீபத்திய மதிப்பீடுகளின் பிரகாரம், உலகளவில் 152 மில்லியன் சிறுவர்களில், 64 மில்லியன் பெண்கள் மற்றும் 88 மில்லியன் சிறுவர்கள், குழந்தைத் தொழிலாளர்களாக உள்ளனர் என்பதைக் குறிக்கிறது, இது உலகளவில் உள்ள அனைத்து சிறுவர்களில் 10இல் ஒரு பங்கைக் கொண்டுள்ளது.

நமது நாட்டை பொறுத்தவரையில், சிறுவர் தொழிலாளர்களை இல்லாதொழிக்க, “அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் சிறுவர் தொழிலாளரை ஒழிப்போம்” எனும் தொனிப்பொருளில் பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. எனினும், குடும்ப சுமையால், சிறுவர்கள் தொழில்களுக்கு அமர்த்தப்படுகின்றனர். இல்லையேல், தரகு பணத்தை பெற்றுக்கொள்வதற்காக அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

சிறுவர் தொழிலாளர்களில் பலர் பாலியல் தொழிலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இன்னும் சிலர், பாலியல் சுரண்டலுக்கு உள்ளாகியுள்ளனர். பெருந்தோட்டங்களைச் சேர்ந்த பலர், பெருநகரங்களில் வீட்டுவேலைக்கு அமர்த்தப்படுகின்றனர். சிலர், பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலைச் செய்யப்பட்டும் உள்ளனர்.

செய்ய எதுவும் இல்லாத குடும்பங்கள், இதற்கு முன்பு ஒருபோதும் எடுக்காத முடிவுகளை எடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர், மேலும் எதிர்மறையான சமாளிக்கும் உத்திகளை நாடுகிறார்கள். இவை குழந்தைகள் மீது உடனடி மற்றும் நீண்டகால விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்பது உண்மையாகும்.




தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

நம்மவர்கள் பலர் நாட்டை விட்டு வெளியேறி, அந்நிய நாடுகளுக்குச் சென்று, அங்கேயே வாழ்வதால், வாழ்க்கையின் நடைமுறைகள், கலாசாரங்கள் மாறிவிடுகின்றன.

சிலர், தமது தாய் மொழியைக் கொச்சையாகப் பேசி, தாம் குடியேறிய நாடுதான் தமது தாய்நாடு போல தங்களை மாற்றி விடுகிறார்கள். அவர்களின் பிள்ளைகளும் தமது தாய் மொழியின் வனப்பு, பேச்சின் தன்மை எதுவும் புரியாது, குடியேறிய நாட்டின் மொழியே தமது தாய்மொழி என எண்ணிக் கொள்கிறார்கள்.

தாய் நாட்டுக்கு வந்தால், பேரன், பேத்தியுடன் தாய்மொழியில் பேச முடியாது போக, பெற்றோர் மொழி பெயர்ப்பாளராக மாறிவிடுகின்றனர்.

தான் குடியேறிய நாட்டுக்கு விசுவாசமாகவும் அந்த நாட்டின் மொழியை கசடறவும் கற்றுப் பேசவும் வேண்டும். அதற்காகத் தாய் மொழியை மறந்து விட வேண்டுமா? தாய் மொழியை ஒரு போதும் மறவாதீர்கள்.

- பருத்தியூர் பால. வயிரவநாதன்

# ‘விபசாரம்’ செய்ய ஒப்பானதான ‘தமிழரசுக் கட்சி’

முருகானந்தம் தவம்

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலையடுத்து, வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைக்கத் தமிழ்த் தேசியக் கட்சிகளில் முதன்மையானதும் தாய் கட்சி என்றும் அழைக்கப்படும் இலங்கை தமிழரசுக் கட்சி முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழமக்கள் ஜனநாயக கட்சியிடம் (ஈ.பி.டி.பி.) ஆதரவு கேட்டு அக்கட்சியின் அலுவலகப் படி ஏறியமை தமிழ்த் தேசிய அரசியலிலும் தமிழ் மக்கள் மத்தியிலும் கடும் விமர்சனங்களையும் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழமக்கள் ஜனநாயக கட்சியை (ஈ.பி.டி.பி.) தமிழினத் துரோகிகள், ஒட்டுக்குழு, ஆயுதக்குழு, இராணுவ துணைக்குழு, தமிழ் இளைஞர், யுவதிகள் பலர் படுகொலை செய்யப்படவும் காணாமல்போகவும் காரணமானவர்கள், காட்டிக்கொடுப்பவர்கள் என்றெல்லாம் இதே தமிழரசுக் கட்சியினரால் குற்றம் சாட்டப்பட்டுத் தீண்டத்தகாதவர்களாக ஒதுக்கி வைக்கப்பட்ட ஈ.பி.டி.பியிடமே ஆதரவு கேட்டு தமிழரசு கட்சி மண்டியிட்டுள்ளமை தமிழ் தேசியப் பரப்பில் மட்டுமன்றி, தமிழரசுக் கட்சிக்குள்ளும் கொதி நிலையை ஏற்படுத்தியுள்ளது.

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் தொகுதிவாரி, விகிதாசார முறைமையினால் வடக்கு,கிழக்கு மாகாணங்களிலுள்ள உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைப்பதில் ஏற்பட்ட நெருக்கடிகளினாலேயே தமது தமிழ்த் தேசிய முகமூடிகளைக் கழற்றி வைத்துவிட்டு, தமிழினத் துரோகிகள், ஒட்டுக்குழு, இராணுவத் துணைக்குழு என தங்களினாலேயே குற்றம்சாட்டப்பட்ட, ஒதுக்கிவைக்கப்பட்ட தரப்புக்களின் காலடி தேடித் சென்று உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைக்க ஆதரவு கோரி சிரம் தாழ்த்தி தரம் தாழ்ந்துள்ளதாக தமிழரசுக் கட்சியின் மீது வசை பாடப்படுகின்றது.

> **காட்டிக்கொடுத்து தமிழ் மக்களினால் புறக்கணிக்கப் பட்டவர்களுடன் கைகோர்த்து தமிழ் தேசியத்தையும் தமிழ் மக்களையும் புறந்தள்ளிச் செயற்படத் தொடங்கியுள்ளமை விரைவில் ‘இலங்கை தமிழரசுக் கட்சி’ என ஆல விருட்சத்தை அடியோடு சாய்த்து விடவுள்ளது**

தமிழ்த் தேசியத்தின் மீது உண்மையான பற்றுறுதியும் கொள்கைப் பிடிப்பும், இலட்சியமும் கொண்ட ஏனைய தமிழ்த் தேசிய கட்சிகளுடன் இணைந்து உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைக்க வரட்டுக் கௌரவமும் மேதாவித் தலைக்கனமும் ஆணவமும் தமிழரசிலுள்ள சில மூக்கு வீங்கியவர்களின் தமிழ்த் தேசிய மறுப்பும் இடம்கொடுக்காமையினால்தான் தங்களினாலேயே துரோகிகள் என பட்டம் சூட்டப்பட்டவர்களிடம் பதவி மோகத்தினால் பகை மறைந்து அடிபணிந்துள்ளது தமிழ்த் தேசியத்தின் தாய் கட்சியான தமிழரசுக் கட்சி. இது பதவிகளுக்கா தமிழ் மக்களின் அரசியல் தலைவர்கள் எந்தளவு கீழ்த்தரமான நிலைக்கும் தரம் இறங்குவார்கள், எந்தளவு கீழ்த்தரமான வேலைகளையும் செய்வார்கள் என்பதற்கான உதாரணமாகவும் மாறிப்போயுள்ளது.

உள்ளூராட்சி சபைகளில் இணைந்து ஆட்சியமைக்க ஏனைய தமிழ் தேசியக்கட்சிகள் ஆதரவளிக்கத் தயாராக இருந்த போதும் அவர்களுக்கு எந்தவொரு விட்டுக் கொடுப்பையும் செய்ய மறுத்து அவர்களை நிராகரித்து விட்டு உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைப்பது தொடர்பில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே சிவஞானம் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் (ஈ.பி.டி.பி.) தலைவர், டக்ளஸ் தேவானந்தாவை அவரது யாழ். நகரிலுள்ள ஸ்ரீதர் திரையரங்கு அலுவலகம் சென்று ஆதரவு கோரியுள்ளார்.

இந்த சந்திப்பு விடயம் தொடர்பில் சி.வி.கே.சிவஞானம் தன்னுடன் தொலைபேசியில் உரையாடியதாகவும் அதுமட்டுமன்றி, இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் தவிசாளர் ஒருவர் தன்னைச் சந்திப்பதற்குப் பல தடவைகள் முயற்சி செய்ததாகவும் அதன் பின்னரே சிவஞானம் சந்தித்து ஆதரவு கோரியதாகவும் டக்ளஸ் தேவானந்தா பகிரங்கமாக கூறியுள்ளதன் மூலம், டக்ளஸ் தேவானந்தா தனது கொள்கையில் இன்று வரை உறுதியாகவுள்ள நிலையில் தமிழரசுதான் பதவிகளுக்காகக் கொள்கையை விட்டுக் கொடுத்துள்ளதுடன், கட்சியையும் ஆதரவாளர்களையும் தமிழ் மக்களையும் காட்டிக்கொடுத்துள்ளது.

ஈ.பி.டிபியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவை தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி. கே.சிவஞானம் சந்தித்தமையானது, கட்சியின் அடிமட்ட தொண்டனால் கூட ஏற்றுக்கொள்ள முடியாது. அண்மையில் பிள்ளையான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் செயலாளர் பிரசாந்தன் மற்றும் கருணா ஆகியோர் எங்களுடன் சேர்ந்து தமிழரசுக் கட்சி பயணிக்க வேண்டும் என்றனர். எனவே, தற்போதைய சூழ்நிலையில் சி.வி. கே.சிவஞானம் அவர்களுடனும் கூட்டுச் சேர வாய்ப்புள்ளது. டக்ளஸ் தேவானந்தாவுடன் கூட்டணி சேர முடிவெடுத்த இவர்களுக்கு பிள்ளையான் - கருணாவுடன் கூட்டணி சேர்வது இலகுவானது என்று தமிழரசுக் கட்சியினர் புலம்புமளவுக்குத் தமிழரசின் தலைமை அரசியல் விபசாரத்தில் ஈடுபட்டுள்ளது.

தமிழரசின் தலைவர்கள் இதுவரை கட்டிக் காத்துவந்த கட்சியின் கொள்கை, தமிழ்த் தேசியம் மீதான பற்றுறுதி, கட்சி மீதான விசுவாசம், தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டம் என்பவற்றை இன்று சதிகள், கழுத்தறுப்புகள், குழிபறிப்புக்கள் மூலம் தலைமைப் பதவிக்கு வந்தவர்கள் ஒட்டுமொத்தமாகக் கைவிட்டு, காட்டிக்கொடுத்து தமிழ் மக்களினால் புறக்கணிக்கப்பட்டவர்களுடன் கைகோர்த்து தமிழ் தேசியத்தையும் தமிழ் மக்களையும் புறந்தள்ளிச் செயற்படத் தொடங்கியுள்ளமை விரைவில் ‘இலங்கை தமிழரசுக் கட்சி’ என ஆல விருட்சத்தை அடியோடு சாய்த்து விடவுள்ளது.

விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் ஒரு கட்சியாக ஒரு தடவை அப்போதைய தமிழரசுக் கட்சியினதும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினதும் தலைவராகவிருந்த இரா.சம்பந்தனை சந்தித்து பாராளுமன்ற தேர்தலில் இணைந்து போட்டியிட சில ஆசனங்களைக் கோரியபோது, ‘தமிழரசுக் கட்சி அஹிம்சாவளிக்கட்சி. அதில் ஆயுதம் தூக்கியவர்கள் போட்டியிடமுடியாது. தேவையானால் தமிழரசு தலைமையில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளிடம் ஆசனம் கேட்டுப்பாருங்கள்’ என கூறி முன்னாள் போராளிகளின் கோரிக்கையை நிராகரித்து அவர்களைத் திருப்பி அனுப்பியிருந்தார்.

> **ஆயுதக் குழுவாக செயற்பட்ட டக்ளஸ் தேவானந்தாவின் ஈ,.பி. டி.பியுடன் ஆதரவுடன் ஆட்சியமைக்க அவர்களின் காலடிக்கே சென்றுள்ளது தற்போதைய தமிழரசின் தலைமை. தலைமைப் பதவிக்கு தகுதியில்லாத தற்குறிகள் தலைவர்களானால் ஒரு கட்சியின் நிலைமை ‘விபசாரம்’ செய்வதற்கு ஒப்பானதாகிவிடும் என்பதற்கு ‘இலங்கை தமிழரசுக் கட்சி’ தான் தற்போது சிறந்த உதாரணம்**

இவ்வாறாக பாராளுமன்றத் தேர்தல் போட்டியிட வேட்பாளர் பட்டியலில் சில இடங்களைக் கேட்ட தமிழ் மக்களின் உரிமைக்காகப் போரிட்ட, அளப்பரிய தியாகங்களைச் செய்த விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளையே ‘ஆயுதம் தூக்கியவர்கள்’ என்ற காரணம் காட்டி, தமிழரசின் தலைமை நிராகரித்த நிலையில்தான் தமிழின போராட்டத்தைக் காட்டிக்கொடுத்த, இராணுவத்துடன் இணைந்து ஆயுதக் குழுவாக செயற்பட்ட டக்ளஸ் தேவானந்தாவின் ஈ,.பி.டி.பியுடன் ஆதரவுடன் ஆட்சியமைக்க அவர்களின் காலடிக்கே சென்றுள்ளது தற்போதைய தமிழரசின் தலைமை. தலைமைப் பதவிக்கு தகுதியில்லாத தற்குறிகள் தலைவர்களானால் ஒரு கட்சியின் நிலைமை ‘விபசாரம்’ செய்வதற்கு ஒப்பானதாகிவிடும் என்பதற்கு ‘இலங்கை தமிழரசுக் கட்சி’ தான் தற்போது சிறந்த உதாரணம்.

## கடிதங்கள்

### கடுமையான சுற்றுச்சூழல் பாதிப்பு

ஹட்டன் நகரில் குப்பைகள் கொட்டப்படுவதால் கடுமையான சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன், அப்பகுதியில் ஈக்கள், நுளம்புகள் அதிகரித்து வருவதால் அப்பகுதி மக்களின் சுகாதாரத்திற்கு பல்வேறு அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு குப்பைகள் கொட்டப்படுவதால், தற்போது இந்தப் பகுதிகளில் கடுமையான துர்நாற்றம் வீசுவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த சூழ்நிலையில்,கடுமையான சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுவது மட்டுமல்லாமல், அவர்களின் ஆரோக்கியத்திற்கும் பல்வேறு அச்சுறுத்தல்களும் ஏற்பட்டுள்ளது.

மேலும் குப்பைகள் கொட்டுவதைத் தடை செய்யும் அறிவிப்புப் பலகைகள் நிறுவப்பட்ட இடங்களில் பெருமளவில் குப்பைகள் கொட்டப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

- சுதத் எச்.எம்.ஹேவா



# ‘லங்காதீப ஆலோக பூஜை’

2025 பொசன் போயாவை முன்னிட்டு, தந்திரிமலை விஹாராயில், விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் (WNL) தொடர்ச்சியாக 21ஆவது ஆண்டாக ஏற்பாடு செய்த ‘லங்காதீப ஆலோக பூஜை’ திங்கட்கிழமை (09) தொடங்கியது.

இரண்டாவது நாள் நிகழ்வை விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டின் தலைவர் ரஞ்சித் விஜேவர்தன சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார்.

மேலும் இந்த நிகழ்வில், விஜய செய்தித்தாள் லிமிடெட்டின் தலைமை இயக்க அதிகாரி ஜனக ரத்னகுமாரவும் பங்கேற்றார்.












# இரை தேடும் பறவைகள்





றொசில்டா அன்டன்

**“மீண்டும் “மஞ்சுளா... மஞ்சுளா... மஞ்சுளா...” அங்கே பார்வதியும் இப்போது அவர்களுடன்.. பலமுறை உதவிக்கு அழைத்தும், இந்த உயிருள்ள மனிதர்களின் இயல்பை மாற்ற இறைவனாலும் முடியவில்லையே மஞ்சுளா இரண்டு குழந்தைகளுடன் வெறித்துப் பார்த்தவளாய் காற்றோடு கலந்தவளாய்...**

பார்வதியின் அழைப்பு அசரீரியாக “மஞ்சு மஞ்சு” பலமுறை கூப்பிட்டும் திரும்பல என்ன யோசனை எங்கயோ எதையோ வெறித்துப் பார்த்தவளாய் மஞ்சுளா தான் பெற்ற இரண்டு பெண் பிள்ளைகளுடன் நின்றுக் கொண்டிருந்தார்.

பார்வதி மஞ்சுளாவின் பக்கத்து வீட்டில் வசிப்பவர், ஓய்வூதியம் பெறுகின்றவர், பிள்ளைகள் மண முடித்து நல்ல நிலையில் வெவ்வேறு இடத்தில் வசிப்பதால் தன் பூர்வீகவீட்டிலேயேவசிப்பவர்.

உடல்நலக்குறைவால் எங்கும் செல்வதில்லை வீட்டிலேயே தன்னை சிறைப்படுத்திக்கொண்டார்.

மஞ்சுளா பார்வதிக்கு தேவையான வீட்டு வேலைகளை செய்து அன்றன்றைக்கு பார்வதி வீட்டில் கிடைக்கும் உணவைக் கொண்டே பிள்ளைகளின் பசியைபோக்கினாள்.

ஊதாரி கணவனால் மஞ்சுளா மட்டுமன்றி, அவளது பிள்ளைகளும் பாதிக்கப்பட்டனர். நாள் தோறும் குடிப்பான், பல்வேறு சித்திரவதைகள். மஞ்சுளா கடைசியாக விவாகாரத்து செய்ய முடிவு செய்தாள். “பார்வதி அக்கா இன்று வழக்கு.. இது முடிவுக்கு வந்தால் சரி நான் ஏதுவும் முடிவு எடுக்கலாம், மகள்களை ஆசிரமத்தில் விட்டுட்டு வெளிநாட்டுக்கு வேலைக்கு போகலாம் என்று நினைக்கிறேன்”.

“சரி நீ வழக்குக்குபோய் வா மூத்தவள் இளையவளை பார்த்துக்கொள்ளட்டும்” என்றாள் பார்வதி.

மஞ்சுளாவின் மூத்த மகளுக்கு வயது பதினொன்று மற்ற மகளுக்கு ஆறு வயது பெண் பிள்ளைகள் என்பதால் பார்வதிக்கும் உதவியாகபோய் விட்டது. பசி போக்குவதற்கே பெரும் பாடுபடும் மஞ்சுளா பிள்ளைகளின் கல்வித் தேவைக்கு, வாழ்வாதாரத்திற்கு பலரிடம் கையேந்தி விட்டாள். பல இடங்களில் அவள் அவமானப்பட்டாள். கணவன் கடன்பட்டு குடிப்பவன் என்பதால் அவளுக்கு போகுமிடமெல்லாம் துன்பம் தொடர்கதையானது. வழக்கும் முடிவு கண்டது. மூத்தவள் பெரியவளாகி விட்ட செய்தி மஞ்சுளாக்கு மகிழ்ச்சியாக இருந்தாலும் அதிர்சியளித்தது.

ஒழுங்கான வீடு கூட இல்லாத நிலையில், பல இன்னல்கள். ஆண் துணையின்றி அவள் இரண்டு பெண் பிள்ளைகளுடன் என்ன செய்வாள். பார்வதி அக்காவும் பாவம் படுத்தபடுக்கையாகவே இருக்கிறாங்க. பிள்ளைகளை பாடசாலை அனுப்பிட்டு பார்வதி அக்காவின் வீட்டு வேலைகளை செய்ய அவசரம் அவசரமாக வந்தவளுக்கு அங்கே மீண்டுமொரு அதிர்ச்சி. பார்வதி அக்கா இறந்துட்டாங்க.

பார்வதியின் பிள்ளைகளும் அப்போது தான் வந்திறங்கினார்கள் உலகமே என் தலையில் இடிந்து விழுந்ததாக உணர்வு அப்போது தான் ஏற்பட்டது

“இனி..இனி.. நான் என்ன செய்வன்” மஞ்சுளா பதைபதைத்தாள். பிள்ளைகளின் பசியை போக்கிய அந்த பார்வதி தாயும் இறந்த போனதுமே மஞ்சுளா உலகத்தில் அனைத்தையும் இழந்ததாக உணர்ந்தாள்.

நாட்கள் உருண்டோடியது பிள்ளைகளின் பசி ஒரிடத்தில் நிலையாக இருக்க விடவில்லை..

வீட்டில இருந்தால் சரிவராது என்று வேலை கேட்டு சுமதியிடம் சென்றாள். சுமதி மஞ்சுவின் தூரத்து உறவுக்காரி மஞ்சு மேல் கரிசனை கொண்டவள். அவசரத்தில் உதவுபவள், ஆனால், அவளும் ஏழ்மையின் பிடியில் சிக்கித் தவிப்பவள்தான். “றோட் வேலைக்கு கூப்பிடுறாங்க போவமா வாரியா ஐந்நூறு ரூபாய் கிடைக்கும் மஞ்சுளா அக்கா” சுமதி சொன்னதுமே சிறிதும் தாமதிக்காது “வாரன் சுமதி போவம்” என்றாள் மஞ்சுளா. ஐந்நூறு ரூபாதான். ஆனால், வேலையோ மிகவும் கடினம். வீதிக்குதார் ஊற்றனும், வீதியை கூட்டனும்.. இப்படி கொதிக்கும் வெயிலில் கொதி நிலையோடு வேலை.. கொஞ்ச காலத்திலயே வெயில் தாக்கத்தால் மஞ்சுளாவால் வேலைக்கும் போக முடியவில்லை.

மூத்த மகள் யாழினி அம்மாட கஸ்டத்தை உணர்ந்தவளாய் “நான் வேலைக்கு போகவாஅம்மா” என்றதுமே மஞ்சுளாட கண்களில் கண்ணீர். ஆறு வயது மகள் மீராவுக்கு எந்த குடும்ப கஷ்டமும் விளங்காதப்படியல் அவள் முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்தாள்.

வீட்டு வாடகைப் பணம் இரண்டு மாதம் கட்டவில்லை என்று வீட்டுக்காரி வேற சத்தம் போட்டாள். பலரிடம் உதவி கேட்டும் வாழ்க்கையில் முதலீடு இல்லாமல் முன்னேறுவது கடினம் என்பது புரிந்தது.

ஆசிரமத்தில் இவர்களை சேர்த்து விட்டு வெளி நாடு செல்வது தான் சிறந்த முடிவு என எண்ணியவளாய் அனைத்து ஏற்பாடும் செய்தாள் மஞ்சுளா.

இலவசமாகவே அனைத்தையும் செய்து தருவதாக ஏஜன்ட் கூறியதால் மஞ்சுளாவிற்கு செலவுகள் பற்றிய கவலையும் இருக்கவில்லை.

வெளிநாடு போகும் நாளும் நெருங்கவே மகள்களுடன் அன்றைய பொழுதை கழிக்க ஆசைப்பட்டாள். அன்று ஊர்க்குளத்தில் மூவரும் நீராடிவர புறப்பட்டனர், அனைத்து துன்பங்களையும் மறந்தவர்களால் நீரின் குளிர்மையோடு மீன்களாகினர். இயற்கை அன்னை அவர்களை தன்னுடன் அழைத்துக் கொண்டாள்.

சிறிது நேரத்தில் பலர் அலறி அடித்துக்கொண்டுகுளத்தில் இறங்கி தேடுதல் வேட்டையில்...

“யாரோ மூன்று பேராம் தற்கொலை பண்ணிட்டாங்களாம்”

“பாவம் வேலை தேடிதேடி கிடைக்கல, எங்களிடம் சரி உதவிகேட்டிருக்கலாம்”
“இதுக்குபோய் தற்கொலையா

முடிவு பிள்ளைகளை விட்டுட்டு அவ செத்திருக்கலாம், எத்தனை பேர் பிள்ளை இல்லாமல் கஸ்டப்படுறாங்க”

உயிருள்ள எத்தனை மனிதர்கள் இறப்பிற்கு பின் பரிதாபக் கண்ணீர் அஞ்சலிகள் ........

வாழும் போது அவள் துன்பம் யார் கண்களுக்கும் புலப்படவில்லை.

மஞ்சுளாதன் குழந்தைகளுடன் மகிழ்ச்சியாகவே நீராட சென்றாள். வழமையாக நீராடும் குளமாக இருந்தும் அவர்களின் விதிபரிதாபம் ஆழம் தெரியாமல் மூவரும் மூழ்கிபோயினர்.

மீண்டும் “மஞ்சுளா... மஞ்சுளா... மஞ்சுளா...” அங்கே பார்வதியும் இப்போது அவர்களுடன், பலமுறை உதவிக்கு அழைத்தும், இந்த உயிருள்ள மனிதர்களின் இயல்பை மாற்ற இறைவனாலும் முடியவில்லையே மஞ்சுளா இரண்டு குழந்தைகளுடன் வெறித்துப் பார்த்தவளாய் காற்றோடு கலந்தவளாய்...



# சிறுவர் தொழிலாளர் எதிர்ப்பு தினம்

ஒவ்வொரு சிறுவர் தொழிலாளி உருவாகும் போதும் நாட்டின் சாதனையாளர் ஒருவர் இழக்கப்படுகின்றார். நாட்டின் எதிர்காலம் இருண்ட நிலைக்குத் தள்ளப்படுகின்றது. புத்தகப் பையை சுமக்க வேண்டிய வயதில் குடும்ப வறுமை காரணமாக சிறுவர் தொழிலாளியாக மாறும் சிறுவர்களின் வாழ்வு சுருண்டு போகின்றதுக் குப்பைப் பையில். இதனைத் தடுக்கவே ILO எனப்படும் பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு குழந்தை தொழிலாளர்களுக்கு எதிரான உலக தினத்தை ஆண்டுதோறும் ஜூன் 12 அன்று கொண்டாட வலியுறுத்துகின்றது.



ஐக்கிய நாடுகள் சபையால் நிறுவப்பட்ட இந்த நாள் உலகெங்கிலும் உள்ள சிறுவர் தொழிலாளர்களின் அவலநிலையை முடிவிற்குக் கொண்டுவரவும், அனைத்து வகையான சிறுவர் தொழிலாளர்களைப் பாதுகாக்கவும் முயற்சி செய்கின்றது. 2002ஆம் ஆண்டு முதல், ILO எனப்படும் பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு, சிறுவர் தொழிலாளர்களைப் பயன்படுத்தும் முறையை ஒழிப்பதற்கும், தடை செய்வதற்கும் உடனடி மற்றும் பயனுள்ள நடவடிக்கைகளை எடுக்க உலக சமூகத்தை வலியுறுத்தியது. 2025ஆம் ஆண்டிற்குள் சிறுவர் தொழிலாளர்கள் இல்லாத உலகை உருவாக்கும் இலக்கை அடைய, அதிகமான செயல்களைச் செய்து கொண்டிருக்கின்றது.

1919ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட வெர்சாய்ஸ் உடன்படிக்கை முதலாம் உலகப் போரை முடிவுக்குக் கொண்டு வந்தது. இந்த உடன்படிக்கை சமூக நீதியின் வழியாக மட்டுமே நிலையான அமைதியை அடைய முடியும் என்ற கொள்கையின் அடிப்படையில் அமைந்தது. இதன் விளைவாக, 2002ஆம் ஆண்டில், சிறுவர் தொழிலாளர்களுக்கு எதிரான உலக நாள் அரசு, சிவில் சமூக அமைப்புகள் மற்றும் தனி நபர்களுக்கு சிறுவர் தொழிலாளர் பிரச்சினையை வலியுறுத்தியுள்ளது. இப்பிரச்சினையை ஒரு விரிவான மற்றும் ஒருங்கிணைந்த முறையில் தீர்க்கவும், சாத்தியமான தீர்வுகளைக் கண்டறிந்து மதிப்பீடு செய்யவும் ஒரு தளத்தை வழங்குவதற்காக நிறுவப்பட்டது இந்நாள். பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு, “சிறுவர்களின் குழந்தைப் பருவம், திறன், மாண்பு, உடல் மற்றும் மன வளர்ச்சிக்குத் தீங்கு விளைவிக்கும் வேலை” என்று சிறுவர் தொழிலாளர்களின் வேலையை வரையறுக்கிறது. இந்த வரையறையானது, சிறுவர் ஒருவர் ஆரோக்கியமான நபராக வளர உதவும் செயல்பாடுகளைப் புறநிலையாக அடையாளம் கண்டுபிடிப்பதற்கு ஒரு வழியாக உள்ளது.

சிறுவர்களை அடிமைப்படுத்தி, அவர்களது குடும்பங்களிலிருந்து அவர்களைப் பிரித்து, கடுமையான ஆபத்துகள் மற்றும் நோய்களைக் நிலை ஏற்படுத்துகின்றது. ILO எனப்படும் பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு 1999ஆம் ஆண்டில் சிறுவர் தொழிலாளர் மற்றும் மனித வர்த்தகத்தை அகற்றுவதற்கான அதன் முயற்சிகளை விரைவுபடுத்தக் சிறுவர்களை பணியமர்த்தும் போது, அவர்களது வயது கட்டாய பள்ளிப்படிப்பு வயதை விடக் குறைவாக இருக்கக்கூடாது என்று வரையறுத்தது. அதன்பின் 2015இல் ILOஆல் நிறுவப்பட்ட உலகளாவிய நிலையான வளர்ச்சி இலக்குகள் அதன் பணிக்குக் கூடுதல் வேகத்தை அளித்தன.

2025ஆம் ஆண்டிற்குள் அனைத்து வகையான சிறுவர் தொழிலாளர்களையும் ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டது. ஆபிரிக்காவில் 7 கோடியே 21 இலட்சம் ஆபிரிக்க சிறுவர்கள், தொழிலாளர்களாக வேலை செய்கின்றனர், அவர்களில் 3 கோடியே 15 இலட்சம் பேர் மிகவும் மோசமான சூழ்நிலையில் வேலை செய்கிறார்கள்.

19ஆம் நூற்றாண்டின் முதல் பகுதி முழுவதும், அமெரிக்காவில் விவசாயம் மற்றும் கைவினைத் தொழில்களில் பல சிறுவர்கள் தொழிலாளர்களாகப் பயன்படுத்தப்பட்டனர். 10 முதல் 14 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் தங்கள் குடும்பத்தினருடன் பண்ணைத் தொழிலாளர்களாகவும், ஒப்பந்தத் தொழிலாளர்களாகவும் பணியமர்த்தப்பட்டனர். இந்த சூழலைத் தவிர்க்கவே சிறுவர் தொழிலாளர் எதிர்ப்பு நாள் கொண்டு வரப்பட்டது.

சிறுவர் தொழிலாளர் விதிமுறைகள் என பொதுவாக அறியப்படும் நியாயமான தொழிலாளர் தரநிலைச் சட்ட விதிகள் 1938ஆம் ஆண்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டன. சிறுவர் தொழிலாளர் முறையை ஒழிப்பதற்கான பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பின் முயற்சிகள், அவசர தேவை குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல், சிறுவர் தொழிலாளர்களின் ஆபத்துகளைப் பற்றி அறியாத பெரியவர்களுக்குக் கல்வி அளிப்பதையும் முன்னெடுத்து வருகின்றது.

ILO எனப்படும் பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பில் 187 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. வளரும் நாடுகளில் உள்ள உழைக்கும் மக்களிடையே அமைதி மற்றும் நேர்மையை உறுதிப்படுத்தும் முயற்சிகளுக்காக 1969ஆம் ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசினை இவ்வமைப்பு பெற்றது. சிறுவர் தொழிலாளர்களின் ஆபத்துகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி, உலகம் முழுவதும் உள்ள பல சிறுவர்களின் வாழ்க்கையை இவ்வமைப்பு மேம்படுத்தியுள்ளது. உலகெங்கிலும் தேவைப்படும் சிறுவர்களுக்கு உதவுவதற்காக, உதவித்தொகை, சிறுவர் பராமரிப்பு திட்டங்கள் போன்ற பல முயற்சிகள் இவ்வமைப்பால் நிறுவப்பட்டுள்ளன. இதனால் அதிகமான சிறுவர்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் உருவாகியுள்ளது.

துன்புறுத்தல்களுக்கு உள்ளாகும் சிறுவர்களுக்கு நன்மை அளிக்கும் வகையில், இந்த உலக சிறுவர் தொழிலாளர்கள் நாள் கொண்டாடப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஒரு கருது பொருளை அடிப்படையாகக் கொண்டு இந்நாள் அனுசரிக்கப்படுகிறது. அதே போன்று இந்த ஆண்டு அனைவருக்கும் சமூக நீதி. சிறுவர் தொழிலாளர் முறையை முடிவிற்குக் கொண்டு வருதல் என்ற கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு உலகம் முழுவதும் இந்நாள் கொண்டாடப்பட்டு வருகிறது.

உலகின் ஏழ்மையான நாடுகளில், ஐந்தில் ஒரு சிறார்கள், சிறுவர் தொழிலாளியாக உள்ளனர்.

வளர்ச்சியடைந்த மற்றும் வளர்ச்சி குறைந்த நாடுகளில், நான்கில் ஒரு பகுதி சிறார்கள் (வயது 5 முதல் 17 வரை) அவர்களின் ஆரோக்கியத்திற்கும் வளர்ச்சிக்கும் கேடு விளைவிப்பதாகக் கருதப்படும் உழைப்பில் ஈடுபடுகின்றது.

ஆபிரிக்காவில் சிறுவர் தொழிலாளர்கள் அதிக அளவில் உள்ளனர். (5 முதல் 17 வயது வரையிலான சிறுவர்களில் 26 சதவிகிதம்). இது லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகளுடன் ஒப்பிடும் போது, 7 சதவிகிதம் குழந்தைகள் தீங்கு விளைவிக்கும் வேலையைச் செய்கின்றனர். உலகின் எல்லாப் பகுதிகளிலும் பாலின வேறுபாடு இன்றி, 5 முதல் 17 வயதுக்குட்பட்ட சிறுவர், சிறுமியர் தொழிலாளர்களாகப் பயன்படுத்தப்படுகின்றனர். இருப்பினும், பெண்களே ஊதியமில்லாத வீட்டுச் சேவைகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகக் காணப்படுகின்றன.

அபாயகரமான தொழிற்சாலை நிலைமைகளில், இழிவான வேலைகளைச் செய்யும் ஏராளமான சிறுவர்கள் இன்னும் இருக்கத்தான் செய்கின்றனர். பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பின் கூற்றுப்படி, இந்தியாவில் சிறுவர் தொழிலாளர்களின் எண்ணிக்கை நகரங்களை விட கிராமப்புறங்களில் அதிகமாகக் குறைவடைகின்றது. அதே நேரத்தில், நகரங்களில் மோசமான பாதிப்புக்களை ஏற்படுத்தும் வேலைகளுக்குக் சிறுவர்கள் தள்ளப்படும் சூழலும் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. இந்நிலை மாற சிறுவர் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தி, சட்டத்தைப் புறக்கணிக்கும் முதலாளிகள் மீது இந்திய அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், அதேநேரத்தில், இந்த வறுமையை ஒழிக்க, நாட்டில் கல்வியை மேம்படுத்த வேண்டும்.

கிழக்கில் 332 கவிஞர்களின் கவிதைகள் அடங்கிய

# “கிழக்கின் கவிக்கோர்வை”

வி.ரி.சகாதேவராஜா




கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ‘கிழக்கின் கவிக்கோர்வை’ தொகுப்பு நூல் அறிமுக விழா, கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை நல்லதம்பி மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை(10) அன்று சிறப்பாக நடைபெற்றது.

பண்பாட்டலுவல்கள் திணைக்கள கிழக்கு மாகாணப் பணிப்பாளர் ச.நவநீதன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், பிரதம விருந்தினராக சுஜாதா குலேந்திரகுமார் (மேலதிக செயலாளர் கொள்கை திட்டமிடல் மற்றும் செயல்திறன் மீளாய்வு) கல்வி உயர்கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சு இசுருபாய பத்தரமுல்ல) கலந்து சிறப்பித்தார்.

கௌரவ விருந்தினர்களாக ரி.ஜே.அதிசயராஜ் (பிரதேச செயலாளர் கல்முனை வடக்கு), ஆர்.இளங்குமுதன் (மாகாணப் பணிப்பாளர் கிராமிய அபிவிருத்தி திணைக்களம்) மற்றும் சிறப்பு விருந்தினர்களாக உமா வரதராஜன் (சிரேஷ்ட எழுத்தாளர்), கவிஞர் சோலைக்கிளி (சிரேஷ்ட எழுத்தாளர்), அப்துல் ரசாக் (மொழித்துறை விரிவுரையாளர் இலக்கியவியலாளர்கள் எழுத்தாளர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில், கிழக்கு மாகாணத்தில் இருந்து பெருமளவான கவிஞர்கள் கலந்து கொண்டமை ஒரு சிறப்பம்சமாக அமைந்தது.

‘கிழக்கின் கவிக்கோர்வை’ எனும் கவிதை நூலிலே 332 கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த கவிஞர்களது கவிதை படைப்புகள் உள்ளடங்கிய ஒரு நூலாக இது அமைய பெற்றிருப்பதும் வரலாற்றில் ஒரு புதிய நிகழ்வாக இதனை குறிப்பிடலாம்.

கிழக்கு மாகாணத்தில் உருவான எல்லா கவிஞர்களது கவிதைகளையும் கோர்த்து அதனை புதுமை ஏற்படுத்தி இந்த மாகாணத்தின் புகழைப் பரப்பிட வேண்டும் என்ற அவாவில் ஆயிரம் கவிதைகளை ஆவது கொண்டதொரு தொகுப்பாக இதனை கோர்த்திடவே கிழக்கு மாகாண பணிப்பாளரது முயற்சி இருந்தது, அதற்கான தேடல்கள் தொடர்ந்தாலும் கால நேரம் அந்த தேடலுக்கு ஒரு காற் புள்ளியை இட்டு இருக்கிறது.

இருந்தாலும், 332 கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த கவிஞர்களது கவிதைத் தொகுப்பை வெளியிட்டதில் கிழக்கு மாகாணம் பெருமை கொள்கின்றது.











அமெரிக்கா/இந்தியா

இந்திய மாணவர் நாடு கடத்தல்:

# தூதரகத்தின் பதிவால் பரபரப்பு

அமெரிக்காவின் நெவார்க் நகரில் இந்திய மாணவர் கைவிலங்கிடப்பட்டு தரையில் கிடத்தப்பட்டுக் கிடக்கும் வீடியோ வைரலான நிலையில், அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் நியூ ஜெர்சியில் உள்ள நியூயோர்க் சர்வதேச விமான நிலையத்தில், இந்திய மாணவர் ஒருவர் குற்றவாளியைப் போல நடத்தப்பட்ட சம்பவம் இந்திய சமூகத்தினர் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

ஜூன் 7ஆம் திகதியன்று, குணால் ஜெயின் என்ற இந்திய அமெரிக்கத் தொழிலதிபர், இந்த கொடூர சம்பவத்தைத் தனது அலைபேசி கேமராவில் படம்பிடித்து சமூக வலைத்தளங்களில் பகிர்ந்தார்.

உயர்கல்விக்காக அமெரிக்கா வந்த அந்த மாணவர், கைவிலங்கு பூட்டப்பட்டு, தரையோடு அழுத்தப்பட்டார். கண்ணீர் விட்டு அழுத போதும், வலுக்கட்டாயமாக நாடு கடத்தப்படுவது அந்த வீடியோவில் பதிவாகியுள்ளது.

இந்த வீடியோ வைரலாக நிலையில், வெளிநாடுகளில் உள்ள இந்தியர்களின் பாதுகாப்பு குறித்து பரவலான கவலை எழுந்துள்ளது. சமூக வலைத்தளங்களில் நெட்டிசன்கள் மிகுந்த கோபத்தை வெளிப்படுத்தி, இந்திய அரசாங்கம் உடனடியாக பதிலளித்து உண்மைகளை வெளிக்கொணர வேண்டும் என்று கோருகின்றனர்.

இந்நிலையில், அமெரிக்காவுக்குள் சட்டவிரோதமாக நுழைவதை ஒருபோதும் சகித்துக் கொள்ள மாட்டோம் என இந்தியாவில் உள்ள அமெரிக்க தூதரகம் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இந்தியாவில் உள்ள அமெரிக்க தூதரகத்தின் எக்ஸ் பதிவில்,

“அமெரிக்கா தனது நாட்டுக்கு சட்டப்பூர்வ பயணிகளைத் தொடர்ந்து வரவேற்கிறது. இருப்பினும், அமெரிக்காவிற்குள் சட்டவிரோதமாக நுழைவதை ஒருபோதும் சகித்துக் கொள்ள முடியாது, சகித்துக்கொள்ளவும் மாட்டோம்" என்று பதிவிட்டுள்ளது. முன்னதாக அமெரிக்காவில் சட்டவிரோதமாகக் குடியேறியவர்கள் என கூறி நூற்றுக்கணக்கான இந்தியர்களை கை மற்றும் கால் விலங்கிட்டு அமெரிக்கா நாடு கடத்தியமை குறிப்பிடத்தக்கது.



ஈரான்

இராணுவத் தாக்குதல் நடத்தப்பட்டால்

## ‘இரகசிய அணுசக்தி நிலையங்களை அழிப்போம்’

ஈரான் மீது இராணுவத் தாக்குதல் நடத்தப்பட்டால், இஸ்ரேலில் உள்ள இரகசிய அணுசக்தி நிலையங்களை உடனடியாக குறிவைப்போம் என்று, ஈரானின் ஆயுதப் படைகள் எச்சரித்துள்ளன.

இதற்காக, ஈரானின் உச்ச தேசியப் பாதுகாப்பு கவுன்சில் (SNSC), அண்மையில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

இஸ்ரேலிடமிருந்து முக்கியமான உளவுத்துறைத் தகவல்களைப் பெற்றுள்ளதாக ஈரானின் உளவுத்துறை அமைச்சர் இஸ்மாயில் கதீப் சமீபத்தில் தெரிவித்திருந்தார். இதையடுத்து, இந்த எச்சரிக்கை முக்கியத்துவம் பெறுகிறது.

உளவுத்துறை ஆதாரங்கள் மூலம் சேகரிக்கப்பட்ட தகவல்களுடன் இஸ்ரேலில் உள்ள இரகசிய அணுசக்தி தளங்களை உள்ளிட்ட முக்கிய இலக்குகளை அடையாளம் கண்டுள்ளதாக SNSC தெரிவித்துள்ளது.

ஈரானிய நலன்களுக்கு எதிராக இஸ்ரேல் ஏதேனும் ராணுவ நடவடிக்கை எடுத்தால், இந்த இலக்குகள் மீது பழிவாங்கும் தாக்குதல்களை நடத்த அதன் ஆயுதப் படைகள் தயாராக இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.



அமெரிக்கா

லொஸ் ஏஞ்சல்ஸ் பகுதியில்

## ஊரடங்கு அமுல்

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் (Los Angeles) நகர மையத்தின் ஒரு சிறிய பகுதிக்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஊரடங்கு உத்தரவானது லொஸ் ஏஞ்சல்ஸ் மேயர் கரேன் பாஸ் (Karen Bass) ஆல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த ஊரடங்கு உத்தரவு 1 சதுர மைல் (2.6 சதுர கி.மீ) பரப்பளவில் பொருந்தும் என்றும், உள்ளூர் நேரப்படி செவ்வாய்க்கிழமை (10) இரவு 8 மணி முதல் புதன்கிழமை(11) காலை 6 மணி வரை நடைமுறையில் இருக்கும் என்றும் லொஸ் ஏஞ்சல்ஸ் மேயர் குறிப்பிட்டுள்ளார்.

போராட்டத்தில் ஈடுபடுவோர் இரவு நேரங்களில் கடைகளைக் கொள்ளையடிக்கும் சம்பவத்தில் ஈடுபடுவதால் லொஸ் ஏஞ்சல்ஸ் பகுதியில் இரவு நேர ஊரடங்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக, அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ட்ரம்ப் நிர்வாகத்தின் கீழ், சட்டவிரோதமாகத் தங்கியிருக்கும் வெளிநாட்டினர்களை அடையாளம் கண்டு கைது செய்யும் பணி அமெரிக்கா முழுவதும் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இதற்கெதிராக தற்போது போராட்டம் வெடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பீகார்


# சிறுநீரகத்தை கேட்ட மாமியார்

வரதட்சணையாக மோட்டார் சைக்கிள், பணம், நகைகள் கொண்டு வர முடியாததால், தன் கணவருக்கு சிறுநீரகத்தை தானம் செய்யுமாறு மாமியார் வற்புறுத்தியதாகப் பீகார் பெண் ஒருவர் புகார் அளித்துள்ளார்.

தீப்தி என்ற பெண், முசாபர்பூரில் உள்ள மகளிர் பொலிஸ் நிலையத்தில் அளித்த புகாரின்படி, 2021இல் திருமணமான தீப்தியை, முதலில் மனரீதியாகவும் பின்னர் உடல் ரீதியாகவும் மாமியார் குடும்பத்தினர் துன்புறுத்தியுள்ளனர்.

கணவருக்குச் சிறுநீரகக் கோளாறு இருப்பதை அறிந்ததும், வரதட்சணைக்குப் பதிலாக சிறுநீரகங்களில் ஒன்றை தானம் செய்யுமாறு மாமியார் கட்டாயப்படுத்தியுள்ளனர்.

தானம் செய்ய மறுத்ததால், தீப்தி தாக்கப்பட்டும், மாமியார் வீட்டிலிருந்து வெளியேற்றப்பட்டும் உள்ளார். புகாரி ஏற்று, தீப்தியின் கணவர் உட்பட மாமியார் குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.



# மே. தீவுகளை வெள்ளையடித்த இங்கிலாந்து



“ சௌதாம்டனில் செவ்வாய்க்கிழமை (10) நடைபெற்ற மூன்றாவது போட்டியையும் வென்றமையைத் தொடர்ந்தே 3–0 என மேற்கிந்தியத் தீவுகளை வெள்ளையடித்தது

இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரில் மேற்கிந்தியத் தீவுகளை இங்கிலாந்து வெள்ளையடித்தது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளையும் ஏற்கெனவே வென்ற இங்கிலாந்து, சௌதாம்டனில் செவ்வாய்க்கிழமை (10) நடைபெற்ற மூன்றாவது போட்டியையும் வென்றமையைத் தொடர்ந்தே 3-0 என மேற்கிந்தியத் தீவுகளை வெள்ளையடித்தது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: மே. தீவுகள்

இங்கிலாந்து: 248/3 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: பென் டக்கெட் 84 (46), ஜேமி ஸ்மித் 60 (26), ஜேக்கப் பெத்தெல் ஆ.இ 36 (16), ஹரி ப்றூக் ஆ.இ 35 (22)ம் ஜொஸ் பட்லர் 22 (10) ஓட்டங்கள்)

மே. தீவுகள்: 211/8 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: றொவ்மன் பவல் ஆ.இ 79 (45), ஷே ஹோப் 45 (27), ஷிம்ரோன் ஹெட்மயர் 26 (08), ஜேஸன் ஹோல்டர் 25 (12) ஓட்டங்கள். பந்துவீச்சு: லுக் வூட் 3/31 [4], அடில் ரஷீட் 2/30 [4], லியாம் டோஸன் 1/34 [4])

போட்டியின் நாயகன்: பென் டக்கெட்

தொடரின் நாயகன்: ஜொஸ் பட்லர்.



ஆசியக் கிண்ண தகுதிகாண் போட்டிகள்:

## தாய்வானை வீழ்த்திய இலங்கை

ஆசிய கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் ஆசியக் கிண்ணத் தொடருக்கான தகுதிகாண் போட்டிகளின் குழுநிலைப் போட்டிகளில், கொழும்பு குதிரைப் பந்தயத் திடல் மைதானத்தில் செவ்வாய்க்கிழமை (10) நடைபெற்ற தாய்வானுடனான போட்டியில் 3-1 என்ற கோல் கணக்கில் இலங்கை வென்றது.

இலங்கை சார்பாக ஆதவன் ராஜ்மோகன், டிலோன் டீ சில்வா, வஸீம் றஸீக் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். தாய்வான் சார்பாக குவாங் வெய்-சியெஹ் பெற்றிருந்தார்.

# ஆண்டின் சிறந்த வீரர்களாக கமிந்து, அத்தப்பத்து




இலங்கை கிரிக்கெட் சபையின் விருதுகள் இரவில், ஆண்டின் சிறந்த வீரராக கமிந்து மெண்டிஸும், சிறந்த வீராங்கனையாக சாமரி அத்தப்பத்துவும் தெரிவாகினர்.

திங்கட்கிழமை (09) நடைபெற்ற இவ்விழாவுக்கான காலப்பகுதியில் 74.92 என்ற சராசரியில் 1,049 ஓட்டங்களை கமிந்து பெற்ற நிலையில் டெஸ்ட் போட்டிகளுக்கான சிறந்த துடுப்பாட்டவீரராகவும் தெரிவானார்.

விருதுக்கான காலப் பகுதியில் 100 பந்துகளுக்கு 127.64 ஓட்டங்கள் என்ற வேகத்தில் 628 ஓட்டங்களைப் பெற்ற குசல் மெண்டிஸ் இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளுக்கான சிறந்த துடுப்பாட்டவீரராகத் தெரிவானார்.

இதேவேளை விருதுக் காலத்தில் 63.09 என்ற சராசரியில் 694 ஓட்டங்களைப் பெற்ற பதும் நிஸங்க ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான சிறந்த துடுப்பாட்டவீரராகத் தெரிவானார்.

இந்நிலையில் ஆண்டின் சிறந்த வீராங்கனை தவிர இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளுக்கான சிறந்த துடுப்பாட்ட, பந்துவீச்சு, சகலதுறை வீராங்கனையாகவும் சாமரி அத்தப்பத்து தெரிவாகியிருந்தார். விருதுக்கான காலப்பகுதியில் 21 விக்கெட்டுகளைக் கைப்பற்றியதோடு, 720 ஓட்டங்களையும் பெற்றிருந்தார்.

ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 65.42 என்ற சராசரியில் 458 ஓட்டங்களைப் பெற்றதோடு ஒன்பது விக்கெட்டுகளைக் கைப்பற்றிய நிலையில் சிறந்த துடுப்பாட்ட, சகலதுறை வீராங்கனை விருதுகளை வென்றிருந்தார். 17 விக்கெட்டுகளை கைப்பற்றிய கவிஷா டில்ஹாரி சிறந்த பந்துவீச்சாளருக்கான விருதை வென்றிருந்தார்.

இந்நிலையில் ஒன்பது டெஸ்ட்களில் 48 விக்கெட்டுகளை விருதுக்கான காலப்பகுதியில் கைப்பற்றிய பிரபாத் ஜெயசூரிய, டெஸ்டுக்கான சிறந்த பந்துவீச்சாளராகத் தெரிவானார்.

இதேவேளை, 10 டெஸ்ட்களில் 710 ஓட்டங்களைப் பெற்றதோடு ஆறு விக்கெட்டுகளைக் கைப்பற்றிய அணித்தலைவர் தனஞ்சய டி சில்வா டெஸ்ட்களுக்கான சிறந்த சகலதுறைவீரராகத் தெரிவாகியிருந்தார்.

இந்நிலையில் விருதுக் காலப்பகுதியில் இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளில் 38 விக்கெட்டுகளைக் கைப்பற்றியதோடு, ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 26 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய வனிது ஹசரங்க இரண்டு வகைப் போட்டிகளிலும் சிறந்த பந்துவீச்சாளராகத் தெரிவானதோடு, இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளில் 179 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அதில் சிறந்த சகலதுறை வீரராகத் தெரிவானார்.

ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 50.41 என்ற சராசரியில் 605 ஓட்டங்களைப் பெற்ற அணித்தலைவர் சரித் அசலங்க, 10 விக்கெட்டுகளையும் கைப்பற்றிய நிலையில், ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் சிறந்த சகலதுறைவீரராகத் தெரிவாகியிருந்தார்.

இந்நிலையில், ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 46.20 என்ற சராசரியில் 462 ஓட்டங்களைப் பெற்ற ஜனித் லியனகே, வளர்ந்து வரும் வீரராகத் தெரிவாகியிருந்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 12, ஜூன் 2025, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.